1978 செப்டம்பர் 13]

கள்ளக்குறிச்சியில் நவீன அரிசி ஆலை

*வினா எண் 176— திரு. துரை முத்துசாமி :— மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கள்ளக்குறிச்சி கூட்டுறவு விவசாய விற்பனைச் சங்கத்திற்கு நவீன அரிசி ஆலை கட்ட ஆன செலவு எவ்வளவு?

(ஆ) இதற்கு தென்னாற்காடு கூட்டுறவு மத்திய வங்கி ஏதும் முன்பணம் வழங்கியுள்ளதா?

(இ) ஆம் எனில் அதில் எவ்வளவு தொகை திரும்பச் செலுத்தப்பட்டது?

(ஈ) கூட்டுறவுச் சங்கத்தால் கட்டப்படும் நவீன அரிசி ஆலைகளுக்கு அரசு மானியம் ஏதாவது வழங்கப்படுகிறதா?

(உ) ஆம் எனில் அதன் விபரம் என்ன?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : (அ) ரூ. 17,53,655 ஆகும்.

(ஆ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

(ஈ) & (உ) : கள்ளக்குறிச்சி அரிசி ஆலையைப் பொறுத்த மட்டில் அரசு மானியம் ஏதும் இல்லை. எனினும், ஆலையைப் பராமரிக்க அமர்த்தப்பட்ட சிப்பந்திகளுக்கான முதல் மூன்று ஆண்டுகளுக்கு மானியமாக ரூபாய் 76,784.50-ஐ அரசு அளித்தது.

திரு. துரை முத்துசாமி : தலைவரவர்களே, கள்ளக்குறிச்சி கூட்டுறவு விவசாய விற்பனைச் சங்கத்தின் முன்னாள் தலைவர்மீது ஊழல் சம்பந்தமாக வழக்குத் தொடரப்பட்டிருக்கிறது. அந்தக் கூட்டுறவு விவசாய விற்பனைச் சங்கம் தற்போது யாருடைய தலைமையில் இயங்குகிறது?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அதற்குத் தனிக் கேள்வி போடுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

வேதாரண்யம் தொகுதியில் இறைவைப் பாசனத் திட்டம்

*வினா எண் 177—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தஞ்சை மாவட்டம் வேதாரண்யம் தொகுதியில் இறைவை பாசனத் திட்டத்தின் கீழ் மனுக்கள் எத்தனை வந்து உள்ளன?

(ஆ) திட்டம் எந்த அளவில் உள்ளது?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : (அ) மனு எதுவும் பெறப்படவில்லை.

(ஆ) திட்டமெதுவும் அமுலிலில்லை.

திரு. இரா. தாமரைக்கனி : தலைவரவர்களே, இந்த வேதாரண்யம் தொகுதி கடலோரப் பகுதியாக இருப்பதால்-இறைவைப் பாசனத் திட்டம் இல்லாவிட்டாலும் - மேல் நாடுகளில் கடல் நீரிலிருக்கிற உப்பை நீக்கி, விவசாயக் காரியங்களுக்குப் பயன் படுத்துவதைப்போல, நம்முடைய அரசும் வேதாரண்யம் பகுதியில் கடல் நீரிலுள்ள உப்பை நீக்கி, நீர்ப்பாசன வசதிக்கு ஏற்பாடு செய்து, விவசாயப் பெருங்குடி மக்களுக்கு நன்மை செய்யும் திட்டத்தை உருவாக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : உறுப்பினர் அவர்களுடைய நல்ல ஆலோசனைகள் அனுதாபத்தோடு பரிசீலிக்கப்படும்.

[முற்பகல் 9·10]

திரு. மு. அம்பிகாபதி: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, வேதாரண்யம் பிரசித்தி பெற்ற ஒரு ஸ்தலம். அந்தப் பகுதியிலே இருக்கின்ற மக்கள் தண்ணீர் இன்றி பெரிதும் சிரமப் படுகிறார்கள். எனவே அரசாங்கம் அந்தப் பகுதியிலுள்ள தண்ணீர்ப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு தனியாக ஒரு குழு அமைத்து பரிசீலித்து அவர்களுக்குத் தண்ணீர் கொடுப்பதற்கான வழிவகை செய்ய முன் வருமா என்பதை அறிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய யோசனை நல்லதொரு யோசனையாக இருக்கின்றது. ஆகவே, அவர் தனிக் கேள்வி ஒன்று போடுவாரேயானால் அது குறித்து ஆய்ந்து ஆவன செய்ய தமிழக அரசு உறுதியாக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பிரதம வங்கிகளிலிருந்து கடன் வழங்கல்

வினா எண் 178—திரு. மு. அம்பிகாபதி: மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) பிரதம வங்கிகளில் கடன் வழங்க பிரதம வங்கி ஊழியர்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட மதிப்பீட்டு அதிகாரிகளை நியமிக்க 1976-ம் ஆண்டில் அரசு அனுமதித்துள்ளதா?

(ஆ) ஆம் எனில் அந்த உத்திரவு அமுலாக்கப்பட்டுள்ளதா?